# 1. வேளாண்மையின் முக்கியத்துவம்

''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'', என்று உழவுத்தொழி லின் - வேளாண்மையின் - சிறப்பினை வான்புகழ் கொண்ட வள்ளுவர் கூறுகின்றார். உலகில் தனிப்பெரும் தொழிலாக உலகோம்பும், உயிர்காக்கும் ஒப்புயர்வற்ற தொழிலாக வேளாண்மை திகழ்வதை என்றும் அறிஞர்கள் நமக்கு உணர்த்துகின்றனர். அத்தகைய வேளாண்மைப் பொருளாதா ரத்தின் முன்னேற்றத்தில் நமது வாழ்வும் வளமும் அடங்கியிருப் பதால் அதனைப்பற்றி அறிவதும் ஆராய்வதும் பொருளியலில் சிறப்பிடம் பெறுகின்றன.

## வேளாண்மைப் பொருளாதாரம்-விளக்கம்

'வேளாண்மை' என்னும் சொல்லை 'பயிர்த்தொழிலை'-நிலத்தில் சாகுபடி செய்தலைக்-குறிக்கும் வகையில் பொது வாகப் பயன்படுத்துகின்றோம். ஆனால் பொருளியலில் அதனை விரிவான பொருளில் கையாள்கின்றோம்.

வேளாண்மை என்பது நிலத்தை உழுது பயிரிடுகின்ற தானிய வகைகள், பருத்தி, தேயிலை, காபி போன்றவற்றின் உற்பத்தியை மட்டுமின்றி கால்நடைகளின் வளர்ச்சியையும் குறிக்கின்றது. அதாவது பால் இறைச்சி ஆட்டுரோமம் ஆகிய வற்றையும் வேளாண்மை உற்பத்திப் பண்டங்களாகவே கருதுகின்றோம்.

வேளாண்மைப் பொருளாதாரம் பொருளியலில் ஒரு பகுதி யாகத் திகழ்கின்றது. இதில் வேளாண்மைத் தொழிலோடு தொடர்புடைய பொருளாதாரச் சிக்கல்களைப் பொருளியல் கோட்பாடுகளின் துணையோடு ஆராய்கின்றோம்.

ஓ பிரெய்ன் [O Brien] என்பவர், ''பொதுப் பொருளியல் கருத்துக்களை கைவினைத் தொழிலாகவும் [Craft] வாணிப மாகவும் (Business) இருக்கின்ற வேளாண்மையோடு தொடர்பு படுத்திப் பயன்படுத்துவது என வேளாண்மைப் பொருளாதா ரத்தை விளக்கலாம்'', என்று கூறுகின்றார். இந்த விளக்கத்தில் வேளாண்மையின் அடிப்படைக் கூறுகளைக் காணலாம். உற்பத்தி செய்யும் நிலையில் வேளாண்மை 'கைவினைத் தொழிலாகக்' காட்சியளிக்கிறது. உற்பத்தி செய்தவற்றை விற்கும் நிலையில் வேளாண்மை 'வாணிபமாக' வடிவெடுக் கின்றது. ஆதலால் வேளாண்மைப் பொருளியலில் இரண்டு

நிலைகளையும் ஆராய்கிறோம். விலையை எப்படி நிர்ணயிக்கின்றனர்? உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதையும், வளர்ச்சியை எப்படி நல்ல விளைவுக்கு கொண்டு வருவது என்பதையும் வேளாண்மைப் பொருளியல் கற்று அறிகின்றது.

வேளாண்மைப் பொருளியல் ஒரு நடைமுறைப் பொருளியலாகும். (Applied Economics) இதன்கீழ் வேளாண்மையில் நிலவரத்தை ஆய்வுசெய்து வேளாண்மையில் உற்பத்தியை பெருக்குவது, நல்ல விலைக்கு விளைபொருட்களை விற்பது ஆகியவை பற்றியும் ஆராய்ந்து கூறுகின்றது.

எனவே பழம்பெரும் தொழிலான வேளாண்மையை நாட்டு மக்கள் 'வாழ்க்கை முறையாக' மட்டும் கருதாமல் மேலும் நல்ல பொருளாதார முன்னேற்றத்தை அடைந்தால் விவசாயிகள் பெருமளவில் நல்ல விளைவுகள் ஏற்படும்.

# IV. பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு

பொருளாதார வளர்ச்சி - விளக்கம்: தலைவீத வருவாய் குறைவாயுள்ள நாடுகளைப் பொருளாதார வளர்ச்சி குறைந்த நாடுகள் என்கின்றோம். இந்த நாடுகள் தங்களது உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நாட்டு வருவாயையும், தலைவீத வருவாயையும் உயர்த்திக்கொள்வதே பொருளாதார வளர்ச்சியாகும்.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் வருவாய் குறைவாக இருப்பதற்குரிய தலையாய காரணங்களில் ஒன்று அத்தகைய நாடுகளில் பெரும்பாலான மக்கள் வேளாண்மையைச் சார்ந்திருப்பதாகும். வேளாண்மையில் ஓராளின் சராசரி உற்பத்தி குறைவாக இருக்கின்றது. இதனால் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றவர்களைவிட வேளாண்மை செய்து வாழ்கின்றவர்களின் வருவாயும் வாழ்க்கைத்தரமும் குறைவாக இருக்கின்றன. ஆதலால் வேளாண்மையில் முன்னேற்றம் காணாமல் பொருளாதார வளர்ச்சி குறைந்த நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாது.

பொருளாதார முன்னேற்ற வழி முறைகள்: வளர்ச்சி குறைந்த நாடுகள் பொருளாதார முன்னேற்றம் காண, (அ) சிலர் வேளாண்மைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கூறுகின்றனர். (ஆ) வேறு சிலர் தொழில்களுக்கு முதலிடம் கொடுத்து வளர்த்தால்தான் பொருளாதாரம் மேம்பாடடையும் என்று வாதிடுகின்றனர். (இ) இன்னும் சிலர் வேளாண்மையை

யும் தொழில்களையும் இணைத்து வளர்த்தால் மட்டுமே சமச்
சீர் வளர்ச்சி பெற முடியுமென்று கருதுகின்றனர்.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் வேளாண்மையைப் புறக்
கணித்துவிட்டு பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது.
வேளாண்மைக்கு முன்னுரிமை கொடுத்து, தொழில்களையும்
வளர்ப்பதுதான் நடைமுறைக்கு ஏற்ற பொருளாதார வளர்ச்சி
முறையாக இருக்கும். ஏனென்றால் பொருளாதார வளர்ச்சியின்
தொடக்க காலத்தில் வேளாண்மையைப் போன்று தொழில்
களை விரைந்து எளிதாக வளர்க்க முடியாது. அதற்கான கார
ணங்களைச் சுட்டிக் காட்டலாம். (1) பெருந்தொழில்களை
வளர்க்கத்திரண்ட முதல்தேவை. வளர்ச்சி குறைந்த நாடுகளின்
தலையாய சிக்கல் மூலதனப்பற்றாக்குறைதான். கிடைக்கிற
குறைந்த முதலை வைத்துக் கொண்டு தொழில்களை வளர்ப்
பதைவிட வேளாண்மையை எளிதாக வளர்க்கலாம். (2)
பெருந்தொழில்களை வளர்க்க வேண்டிய தொழில் நுட்ப
அறிவு எளிதாகக் கிடைப்பதில்லை. (3) தொழில்களை வளர்க்
கின்றபொழுது அவை உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு
உள்நாட்டு, வெளிநாட்டு அங்காடிகளைக் கண்டுபிடிக்க
வேண்டும். பன்னாட்டு வாணிபத்தில் கடுமையான போட்டி
யிருக்கும். இக்காலத்தில் தரமான பொருட்களை உற்பத்தி
செய்து அங்காடியைக் கைப்பற்றுவது செயற்கரிய செயலாக
உள்ளது (4) பெருந்தொழில்களை நடத்துவதில் இழப்பு ஏற்
பட்டால் அவற்றைத் தாங்கிக் கொள்ளும் சக்தி வளர்ச்சி
குறைந்த நாடுகளுக்கு இருப்பதில்லை.

வேளாண்மையின் பங்கு: வளர்ச்சி குறைந்த நாட்டின்
பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மை முன்னேற்றம் கால்
அடித்தளம் அமைத்துத் தருவதோடு துணையாகவும் இருக்
கின்றது. வேளாண்மை இப்பொருளாதாரத்தில் இருக்கின்ற
ஒரே பெருந்தொழிலாக இருப்பதால், இதன் மூலம் பொருளா
தார வளர்ச்சியைப்பெற முயல்வது அறிவுடைமையாகும்.
வேளாண்மை கீழ்க்கண்ட வகைகளில் பொருளாதார முன்
னேற்றத்திற்குத் துணை செய்கின்றது.

1. உணவுப்பொருட்களை அளித்தல்: ஒரு
நாடு பொருளாதார முன்னேற்றத்தில் அடி எடுத்து
வைக்கின்றபொழுது, பல்வேறு காரணங்களினால் உணவுப்
பொருட்களின் தேவை கூடுகின்றது. முதலாவதாக, வளர்ச்சி
காலத்தில் அறிவியலின் துணையால் இருப்புவிகிதம் குறையும்.
ஆனால் எதிர்பார்க்கும் அளவில்பிறப்புவிகிதம் குறைவதில்லை.
இதனால் வளர்கின்ற நாடுகளில் பிறப்பு விகிதம் 2 முதல்

3 சதவீதம் வரை இருப்பதால் மக்கள் தொகை விரைந்து வளர்கின்றது. இதனால் உணவுப் பொருட்களின் தேவை கூடும். இரண்டாவதாக, மூலதனப் பொருட்களான எந்திரங் களின் உற்பத்தி, வளர்ச்சிக்குத் தேவையான கட்டிடங்கள், பாலங்கள் கட்டுதல் போன்றவைகளின் தேவைக்கும் சேர்ந்து வேளாண்மை செய்பவர்கள் எச்சமாக உணவுப் பொருட் களை உற்பத்தி செய்யவேண்டும் மூன்றாவதாக, பொருளா தார வளர்ச்சியின் விளைவாக மக்களின் வருவாய் கூடுகின்ற பொழுது அவர்களின் உணவுத் தேவை கூடுகின்றது. இந்த உணவுத்தேவையின் வருவாய் நெகிழ்ச்சி மிகவும் கவனிக்க வேண்டிய காரணியாகும். ஏனென்றால் வருவாய் கூடுகின்ற பொழுது தேவையின் அளவிற்கு உணவு உற்பத்தி கூட வில்லையென்றால் உணவுப் பொருட்களின் விலை கூடும். இதனால் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்பார்கள். இதன் விளைவாகப் பணவீக்கம் தோன்றும். வேளாண்மை உரிய இடம் பெற்று வளர்ந்து உணவு உற்பத்தி கூடினால் பொருளா தார வளர்ச்சி தடையின்றி நடைபெறும்.

கூடுதல் தேவையான உணவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யலாமென சிலர் கருதலாம். அப்படி இறக்கு மதி செய்வது அயல்நாட்டுச் செலாவணிச் சிக்கலைத்தோற்று விக்கும். மேலும் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப கட்டத் தில், வெளிநாடுகளிலிருந்து எந்திரங்களை இறக்குமதிசெய்வது தேவையாக இருக்கும். கிடைக்கின்ற அந்நியச் செலாவணியை மூலதனப் பொருட்களுக்குப் பயன்படுத்துவதே சிறந்தது. ஆத லால் வேளாண்மையை வளர்த்து, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவது, நாட்டின் மொத்தப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருக்கும்.

2. வேண்டிய உழைப்பை அளித்தல்: பொருளாதார முன் னேற்றத்திற்கு வேண்டிய உழைப்பை வேளாண்மைத் துறை யால் அளிக்க முடியும். தற்போது தேவையைவிட மிகுதியாகத் தொழிலாளர்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றார்கள் அதாவது தொழிலாளர்களின் இறுதிநிலை ஆக்கத்திறன் சைப ராக இருக்கின்றது. ஒரு வகையில் இது மறைந்திருக்கும் வேலையின்மை நிலையாகும். ஆதலால் தொழிலாளர்களில் ஒரு பகுதி வேளாண்மைத் துறையைவிட்டு வெளியேறுவதால் மொத்த விளைபொருள் உற்பத்தி குறையாது. இப்படிக் கிடைக்கின்ற உழைப்பை மூலதனப் பொருட்கள் உற்பத்தியி லும் புதிதாகத் தோன்றும் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்த லாம். இந்தத் தொழிலாளர்கள் ஏற்கனவே கிடைத்த உணவை

உண்டு உயிர் வாழ்ந்தவர்கள். இவர்களின் உழைப்பு 'இலவச'மாகப் பொருளாதார வளர்ச்சிக்குக் கிடைப்பதுபோல் இருப்பது கவனிக்கத்தக்கது.

3. மூலதனத்தை உருவாக்கித் தருதல்: வேளாண்மைத்துறை வளர்கின்றபொழுது அது பலவகைகளில் நாட்டின் முதலாக்கத்திற்கும் முதலீட்டிற்கும் துணை செய்கின்றது. மூலதனமின்றி பொருளாதார வளர்ச்சியைப் பெறமுடியாது. இந்நிலையில் வேளாண்மை எப்படி முதலாக்கத்திற்குத் துணை செய்கின்றதென்பதைச் சுட்டிக்காட்டலாம். வேளாண்மையில் உற்பத்தி கூடி, எச்ச வருவாயை உருவாக்க முடிந்தால் அதனைப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவைகளான சாலைகள்போடுதல், பாலங்கள் கட்டுதல், மின்சார உற்பத்தி போன்றவற்றிலும் தொழில்களை அமைப்பதிலும் முதலீடு செய்யலாம். வேளாண்மைத்துறையின் மூலம் முதலாக்கத்தைப் பெற சில வழிமுறைகளைப் பின்பற்றலாம். (1) கூடுதலாகக் கிடைக்கும் வேளாண்மை வருவாயில் வரிவிதித்து, அரசு அந்த வரி வருவாயை முதலீட்டிற்கும் பயன்படுத்தலாம். (2) வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தி பெருகி, அவற்றின் விலை குறைந்தால், பிற துறையினர் உணவுக்குச் செலவிடும் பணம் குறைய, சேமிப்பும் அதன் வழியாக முதலீடும் கூடும். (3) வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களிடமிருக்கும் எச்ச வருவாயை (சேமிப்பை) பிற துறைகளில் முதலீடு செய்யத் தூண்டலாம். இதற்கு வேளாண்மைத்துறை முன்னேற, அதன் உற்பத்தி கூடவேண்டும்.

4. அயல் நாட்டுச் செலாவணியைத் தேடித்தருதல்: வேளாண்மை வளர்ச்சியின் மூலம் ஏற்றுமதி செய்யும் விளைபொருட்களின் அளவைக் கூட்டுவதன் மூலம் அயல்நாட்டுச் செலாவணியைத் தேடிக்கொள்ளலாம். பொருளாதார வளர்ச்சியின் தொடக்க காலத்தில் அந்நியச் செலாவணியின் தேவை மிகுதியாக இருக்கின்றது. எந்திரங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதன் மூலமாக தொழில்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தலாம்.

5. அங்காடியை விரிவுபடுத்தி தொழில்களின் வளர்ச்சிக்குத் துணை செய்தல்: வளர்ச்சி குறைந்த நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் அல்லது நான்கில் மூன்று பங்கினர் ஏழை உழவர்களாகவும், பண்ணைகளில் கூலிகளாகவும் இருக்கின்றனர். அவர்களின் வருவாய் மிகக்குறை

வாக, வறுமைக் [கோட்டின் கீழ்] இருப்பதால் அவர்களால் தொழில்களின் உற்பத்திப் பொருட்களை வாங்கமுடிவதில்லை. வேளாண்மையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவாய் கூடினால் அவர்களது நுகர்வு கூடும். இதனால் செய்பொருட்களுக்குத் தேவை கூட பெருந்தொழில்களின் வளர்ச்சிக்குத் தூண்டுதல் கிடைக்கும்.

6. வேலை வாய்ப்புப் பெருக்கம்: வேளாண்மைத் துறையின் வளர்ச்சி மொத்த வேலை வாய்ப்பைக் கூட்டும். அறிவியலின் துணையோடு வேளாண்மை வளர்கின்றபொழுது, வேளாண்மைக்குத் தேவையான எந்திரங்கள், உரங்கள், மருந்துகள் உற்பத்தி செய்யும் தொழில்கள் வளரும். மேலும் வேளாண்மையில் புதிய பயிர் வகைகளைப் புகுத்துதல், உற்பத்தி முறை மாற்றங்கள் ஆகியவற்றாலும் வேலைவாய்ப்புக் கூடும். வேலை வாய்ப்புக் கூடுவது பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவை யான ஒன்றாகும்.

7. வேளாண்மையைச் சார்ந்த தொழில்கள்: நமது நாட்டில் செயல்பட்டு வருகின்ற பெரும்பாலான தொழிற்சாலைகள் வேளாண்மையைச் சார்ந்தவைகளாகவே இருக்கின்றன. உதாரணமாக பருத்தித் தொழில், சர்க்கரைத் தொழில் மற்றும் சணல் தொழில் முதலியன வேளாண்மையிலிருந்து கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தித்தான் செயல்பட்டுவருகின்றன. ஆதலால் இது போன்ற தொழில்கள் மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு வேளாண்மைத் துறை முன்னேற வேண்டும்.

நிறைவுரை: பொருளாதார முன்னேற்றம் மக்கள் நலனைப் பெருக்கும் வகையில் ஏற்படுகின்ற பொருளாதார மாற்றமாக அமைகின்றது. இதற்கு வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற மக்களின் தொகை குறையவும், பிறதுறைகளில் பணி செய்வோர் எண்ணிக்கை கூடவும் செய்யவேண்டும். வேளாண்மைத் துறை வளர்கின்ற பொழுதுதான் இந்நிலை ஏற்படும். மேலும் வேளாண்மையின் வளர்ச்சி பிற துறைகளின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதால், பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்னோடியாக விளங்க வேண்டியது வேளாண்மை என்பதை உறுதியாகக் கூறலாம்.)